செ.வெ.எண்: 475 நாள்: 02.08.2020

# தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(02.08.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் கொரோனா நோயாளிகள் பயன்பெறும் வகையில் கூடுதலாக புதிதாக அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகளையும், மனநல சிகிச்சை பிரிவு மற்றும் தோல்நோய் சிகிச்சை பிரிவு ஆகிய கட்டிடங்கள் புதிதாக புனரமைக்கப்பட்டு காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் அவசர சிகிச்சை பிரிவு 24 மணி நேரமும் கண்காணிக்க கூடியவகையில் 2 புதிய வெண்டிலேட்டர் வசதிகளுடன் 20 ஆக்சிசன் இணைப்புகளுடன் கூடிய 20 படுக்கை வசதிகளும், கொரோனா ஆள்கவன மருத்துவப் பிரிவு, ஹைஃப்லோ நோவல் ஆக்சிசன் வசதியுடன் 30 படுக்கைகளும், புதிதாக 15 வெண்டிலேட்டர் வசதிகளும் தயார் நிலையில் உள்ளதை நேரில் பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

மேலும், ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் எக்ஸ்ரே கருவி, 8 லட்சம் மதிப்பீட்டில் உயிர் வேதியல் பரிசோதனை மையம், 10 லட்சம் மதிப்பீட்டில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இவ்வாய்வின் போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ) டாக்டர் மருததுரை, முன்னாள் முதல்வர் டாக்டர் சிங்காரவேலு, நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் செல்வம், தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.